






1. பல்வேறு அரசு திட்டங்களை தொடக்கி வைப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு வந்திருந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆசி வழங்குகிறார் மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார். 2. பிரதமர் மோடிக்கு கிருஷ்ணர் சிலையை நினைவுப் பரிசாக வழங்குகிறார் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி. 3. அர்ஜுன் எம் கே1ஏ பீரங்கி மாதிரியை வழங்குகிறார் ராணுவ தலைமை தளபதி எம்.எம். நரவணே.

# வண்ணாரப்பேட்டை-விம்கோநகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கியது

சென்னை, பிப்.14: வடசென்னை மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்ய உதவும், வண்ணாரப்பேட்டை- விம்கோ நகர் வரையிலான வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதன்மூலமாக, வடசென்னை பயணிகள் சென்னை விமான நிலையத்தை 60 நிமிடங்களில் வந்தடைய முடியும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட திட்டத்தில் விமான நிலையம்-வண்ணாரப்பேட்டை வரையும், பரங்கிமலை-சென்னை சென்ட்ரல் வரையும் 45 கி.மீ. தொலைவில் திட்டப்பணிகள் நிறைவடைந்து, மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து, வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப்பணிகள் ரூ.3,770 கோடியில் நிறைவடைந்துள்ளன. மொத்தம் 9.051 கி.மீ. தொலைவுள்ள இந்த வழித்தடத்தில் 2 சுரங்கப்பாதை ரயில் நிலையங்களும், 5 உயர்நிலைப் பாதை ரயில் நிலையங்களும் என்று ஏழு மெட்ரோ ரயில் நிலையங்கள் இடம்பெற்றுள்ளன. இது வடசென்னையின் மத்தியில் அமைந்துள்ளது.

இந்நிலையில், இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி காணொலி காட்சிமூலமாக கொடியசைத்து தொடக்கி வைத்தார். இது, வடசென்னை மக்களின் போக்குவரத்து தேவைக்கு உதவியாக இருக்கும். மேலும், வடசென்னை பயணிகள் சென்னை விமான நிலையத்தை 60 நிமிடங்களில் வந்தடைய முடியும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.




புதிய ரயில் திட்டங்களை கொடியசைத்துத் தொடக்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி. உடன், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், சட்டப்பேரவைத் தலைவர் பி.தனபால், முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத்.

| | |
|---|---|
| இந்த வழித்தடத்தில் குறைந்தபட்சம் கட்டணம் | ரூ.10 |
| அதிகபட்ச கட்டணம் | ரூ.70 |
| சில முக்கிய இடங்களிலிருந்து விம்கோ நகருக்குச் செல்வதற்கான கட்டண விவரம் | |
| வண்ணாரப்பேட்டை, உயர்நீதிமன்றம் | ரூ.40 |
| சென்ட்ரல், ஆயிரம் விளக்கு, எல்ஐசி, அரசினர் தோட்டம், எழும்பூர் | ரூ.50 |
| சின்னமலை, சைதாப்பேட்டை, நந்தனம், தேனாம்பேட்டை, டிஎம்எஸ் | ரூ.60 |
| கோயம்பேடு பேருந்து நிலையம், விமான நிலையம், மீனம்பாக்கம், நங்கநல்லூர், கிண்டி, ஆலந்தூர் | ரூ.70 |

முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் இரண்டு வழித்தடங்கள் மற்றும் 32 மெட்ரோ ரயில் நிலையங்களுடன் மொத்தம் 45 கி.மீ. தொலைவில் இடம்பெற்றது. இப்போது, முதல்கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்கத்திட்டம் நிறைவடைந்து, பயணிகள் சேவை தொடங்கியுள்ளது. இதன்காரணமாக, முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் மொத்தம் 54 கி.மீ. தொலைவில் 21 சுரங்கப் பாதை ரயில் நிலையங்கள் மற்றும் 18 உயர்த்தப்பட்ட ரயில் நிலையங்களைக் கொண்டுள்ளன.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

நெடுந்தொலைவு செல்லும் ரயில்களை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலும், எழும்பூர் ரயில் நிலையத்திலும், புறநகர் ரயில்களை பூங்கா மற்றும் பூங்காநகர் ரயில்நிலையங்களிலும், நெடுந்தொலைவு பேருந்துகளை கோயம்பேட்டில் உள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலும் ஒருங்கிணைக்கும்வகையில், மெட்ரோரயில் முதல் கட்ட திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுபோல, மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பிலும் டோல்கேட் மற்றும் திருவொற்றியூர் உயர்த்தப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்கள் மாநகரப் போக்குவரத்து பேருந்து முனையங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மேலும், வாகன நிறுத்தம் மற்றும் நடைபாதைகளுடம் சிரமமின்றி பயணம் செய்யும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயில் திட்டம் மூலமாக, கரியமிலவாயுவின் அளவு 30,198 டன் குறையும். இந்த வழித்தடத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 2 லட்சம் மக்கள் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

## மெட்ரோ 2-ஆம் கட்ட ரயில் திட்டம்: 50 சதவீத பங்களிப்பை அளிக்க ஒப்புதல் தேவை

### முதல்வர் பழனிசாமி கோரிக்கை

மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்ட திட்டத்துக்கான செலவினை மத்திய, மாநில அரசுகள் சரிபாதி ஏற்க ஒப்புதல் அளிக்க வேண்டுமென முதல்வர் பழனிசாமி கோரிக்கை விடுத்தார்.

தமிழகத்தில் ரூ.8,000 கோடி மதிப்பில் புதிய அரசுத் திட்டங்கள் தொடக்கம் மற்றும் அடிக்கல் நாட்டு விழா, சென்னையில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் முதல்வர் பழனிசாமி ஆற்றிய சிறப்புரை:

**பிரதமருக்கு பாராட்டு:** உலக நாடுகளை ஒப்பிடுகையில், இந்தியாவில்தான் கரோனா நோய்த்தொற்று வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதமரின் வழிகாட்டுதல்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் காரணம். நோய்த்தொற்று காரணமாக, அமல்படுத்தப்பட்ட ஊரடங்கால் தொய்வடைந்த நாட்டின் பொருளாதாரத்தை வெகு விரைவில் தனது துரித நடவடிக்கைகளால் இயல்பு நிலைக்குக் கொண்டு வந்த பிரதமரின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

**மெட்ரோ ரயில் திட்டம்:** மெட்ரோ ரயிலின் நீட்டிப்பு திட்டத்தின் கீழ் நடந்த பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்போது விரிவடைந்து வரும் சென்னை பெருநகரின் போக்குவரத்து தேவையைக் கருத்தில் கொண்டு, 118.90 கிலோமீட்டர் நீளத்திலான மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத்தினை ரூ.63, 246 கோடியில் செயல்படுத்த முடிவு செய்து அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய, மாநில அரசுகள் தலா 50 சதவீதம் அளவுக்கு நிதிகளை ஒதுக்கிச் செயல்படுத்த வேண்டும். அதாவது, மெட்ரோ ரயிலின் ஒன்றாவது திட்டத்தில் செயல்படுத்திய அதே முறையைப் பின்பற்ற வேண்டும் என்று முதல்வர் பழனிசாமி வேண்டுகோள் விடுத்தார்.

## பிரதமரிடம் கராத்தே தியாகராஜன் வாழ்த்து

சென்னை, பிப். 14: அரசு விழாவில் பங்கேற்க ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடியிடம், பாஜகவில் அண்மையில் இணைந்த கராத்தே தியாகராஜன் வாழ்த்துப் பெற்றார்.

தில்லியில் இருந்து சென்னை வந்திறங்கிய பிரதமர் நரேந்திர மோடியை, விமான நிலையத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார் கராத்தே தியாகராஜன். அவர் சென்னை திருவான்மியூரில் அண்மையில் நடந்த பிரமாண்ட விழாவில், தனது ஆதரவாளர்களுடன் பாஜகவில் இணைந்தார். இதனைத் தொடர்ந்து, பிரதமரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## பிரதமரை தனியாக சந்தித்த முதல்வர்

சென்னை, பிப். 14: பிரதமர் நரேந்திர மோடியுடன், முதல்வர் பழனிசாமி ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் வரை நடைபெற்றது. அரசு விழாவில் பங்கேற்பதற்காக சென்னைக்கு ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி வந்தார். நேரு உள்விளையாட்டரங்கில் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா பிற்பகல் 1 மணியளவில் நிறைவு பெற்றது.

**தனியாக சந்திப்பு:** அரசு விழா நிறைவடைந்ததும், நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள அறையில் பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் பழனிசாமி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது, துணை முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்ட யாரும் உடனிருக்கவில்லை.

இருவரும் சந்தித்துப் பேசிய போது, அரசு ரீதியான விஷயங்கள் உள்பட அரசியல் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டு இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மத்திய அரசின் ஆதரவால் தமிழகத்துக்கு புதிய திட்டங்கள்: துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, பிப். 14: மத்திய அரசின் ஆதரவால் தமிழக அரசின் திட்டங்கள் செயல்வடிவம் பெற்றுள்ளதாக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரசு விழாவில், அவர் ஆற்றிய வரவேற்புரை: தமிழகத்தின் நீண்ட நாளைய திட்டமான கல்லணை கால்வாய் புனரமைப்புத் திட்டம் இப்போது செயலாக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசின் இதுபோன்ற திட்டங்கள் மத்திய அரசின் ஆதரவுடன் சாத்தியமாக்கப்பட்டு வருகின்றன. மெட்ரோ ரயிலின் இரண்டாவது திட்டம் தொடர்பாக, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கு பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசுக்கு ஆதரவு அளிப்பர்:** இது போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இந்த பொன்னான வாய்ப்பினை தமிழக மக்கள் விட மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். எப்படி 2016-ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் அதிமுக அரசுக்கு ஆதரவு அளித்தார்களோ அதுபோன்ற ஆதரவை தொடர்ந்து அளிப்பார்கள் என நம்புகிறேன் என்று கூறினார்.